**மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப.,(ஓ)
முறைமன்ற நடுவர்

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணாசாலை, கிண்டி,சென்னை–600 03
தொலைபேசி எண்: 044–2220133
நிகரி எண்: 044–2220133
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.i
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.i

முறையீட்டு மனு எண்.04/பேரூ/2024, நாள்: 30.09.2024

பெறுநர்

பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

ஐயா,

பொருள்– முறையீட்டு மனு – சிவகங்கை மாவட்டம், கானாடுகாத்தான் பேரூராட்சி மன்ற 9வது வார்டு உறுப்பினரின் கணவர் திரு. லோகேஸ்வரன் மற்றும் 10வது வார்டு உறுப்பினர் திரு. ஆர். ஜெயகணேஷ் என்பவர்களுக்கு பேரூராட்சியில் பணி மேற்கொள்ளாமல் முறைகேடாக காசோலைகள் வழங்கப்பட்டதாக புகார் – தொடர்பாக.

பார்வை– சிவகங்கை மாவட்டம், கானாடுகாத்தான் இடத்தைச் சார்ந்த திரு. K. முனீஸ்குமார் என்பவரின் 02.02.2024 நாளிட்ட முறையீட்டு மனு

.......

சிவகங்கை மாவட்டம், கானாடுகாத்தான் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. K. முனீஸ்குமார் என்பவர், தனது 02.02.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்களில் ஒன்றான கானாடுகாத்தான் பேரூராட்சியின் 9வது வார்டு மன்ற உறுப்பினரின் கணவரான திரு. லோகேஸ்வரன் என்பவருக்கும் மற்றும் 10வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. ஆர். ஜெயகணேஷ் என்பவருக்கும் பணிகளை மேற்கொள்ளாமல், பேரூராட்சி செயல் அலுவலரால் முறைகேடாக காசோலைகள் வழங்கப்பட்டன என புகார் தெரிவித்திருந்தார்.

(2) கானாடுகாத்தான் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.08.2024 நாளிட்ட அறிக்கை மற்றும் அவரது வாக்கு மூலத்தில் கானாடுகாத்தான் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை ஓரங்களிலுள்ள செடிகள், மழைநீர் செல்லும் வரத்துக்கால் மற்றும் குடிநீர் விநியோக பழுது நீக்கப் பணிகளுக்காக 9வது வார்டு மன்ற உறுப்பினரின் கணவரான திரு. லோகேஸ்வரன் என்பவரிடம் மட்டும் ஒரேயொரு JCB இயந்திரம் இருந்ததால், அவர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு காசோலைகள் வழங்கப்பட்டன. அதேபோல், அவசரம் அவசியம் கருதி 3 மின்மோட்டார் பழுது நீக்கம் செய்தவகையில் 10வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. ஜெய்கணேஷ் என்பவருக்கும் காசோலைகள் வழங்கப்பட்டன என தெரிவித்துள்ளார்.

...2

(3) இதற்கிடையில் மனுதாரார் திரு. K. முனீஸ்குமார் என்பவர் தனது 19.08.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த தனது 02.02.2024 நாளிட்ட புகார் மனுவினை திரும்பப் பெறுவதாக அறிவித்து, இம்முறைமன்ற விசாரணையிலும் ஆஜராகவில்லை.

(4) பேரூராட்சியின் 9வது வார்டு மன்ற உறுப்பினர் திருமதி எல். சுரேகா மற்றும் 10வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. ஆர். ஜெயகணேஷ் ஆகியோர் தங்களது 20.09.2024 அன்று அளித்த வாக்குமூலத்தில் பேரூராட்சியில் பணிகள் மேற்கொண்டு அதற்கான பணம் மற்றும் காசோலை பெறக்கூடாது என்கிற விபரம் தங்களுக்கு தெரியாது என்றும், இனி வருங்காலத்தில் அவ்வாறு நடைபெறாது என உறுதியளித்துள்ளனர்.

(5) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப் பிரிவு 32 (1) (e) ன் படி மன்ற உறுப்பினர்களோ அல்லது அவரது இரத்த சம்பந்தமான உறவினர்களோ தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்காக செய்யப்படும் பணி எதிலும் உரிமை நலன் பெறுபவராக இருப்பின், அந்த உறுப்பினர் தகுதியற்றவர் என வரையறுக்கப்பட்டுள்ளது.

(6) பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், கானாடுகாத்தான் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையிலும், வடகிழக்கு பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கைக்காக நீர்வரத்துக்கால் தூர் வாரிடவும், சாலை ஓரங்களில் உள்ள சீமை கருவேல் மரங்களையும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின் பேரில் அகற்றிடவும், ஒரேயொரு JCB இயந்திரத்தை பயன்பாட்டில் வைத்துள்ள 9வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினரின் கணவரான திரு. லோகேஸ்வரன் என்பவர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான காசோலைகள் வழங்கப்பட்டன எனவும், அதேபோல் பேரூராட்சிக்குட்பட்ட குடிநீர் தொட்டியிலிருந்து 2 இலட்சம் லிட்டர் குடிநீர் 9 வார்டுகளுக்கு விநியோகம் செய்யப் பயன்படும் மின்மோட்டார் பழுதடைந்ததன் காரணமாக பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசிய தேவையான குடிநீரை உடனடியாக வழங்க ஏதுவாக அவசர அவசியம் கருதி பேரூராட்சி மன்ற 10வது வார்டு உறுப்பினர் திரு. ஜெயகணேஷ் என்பவர் மூலம் மின்மோட்டார்கள் பழுதுநீக்கம் செய்யப்பட்டு அதற்கான காசோலைகள் வழங்கப்பட்டன என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் அத்தியாவசிய தேவை பொருட்டும் மன்ற உறுப்பினர்/அவரது உறவினர் மூலம் பேரூராட்சியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டப்படி அவ்வாறு பணம் மற்றும் காசோலை பெறக்கூடது என்ற விவரம் தமக்கு தெரியாது என்றும், இனி இதுபோல் நிகழாது என்றும் 9 மற்றும் 10வது வார்டு மன்ற உறுப்பினர்களான திருமதி எல். சுரேகா மற்றும் திரு. ஆர். ஜெயகணேஷ் உறுதியளித்துள்ளனர்.

மேற்காணும், சூழ்நிலையில் கானாடுகாத்தான் பேரூராட்சி மன்ற 9வது வார்டு மன்ற உறுப்பினரின் கணவருக்கும் மற்றும் 10வது வார்டு மன்ற உறுப்பினருக்கும் காசோலைகள் வழங்கியுள்ளது, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப் பிரிவு 32 (1) (e) ன் கீழ் உட்பட்டிருப்பதால், இப்பொருள் குறித்து தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

ஒம்/–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

3/10/24

சட்ட ஆலோசகர் /செயலாளர்(மு.கூ.பொ)

03/10/24